வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 20.08.2025 புதன்கிழமை இதழ் : 232 பக்கங்கள் : 12

# மன்னார் பொது மருத்துவமனையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருக!

## ஜனாதிபதியிடம் கோரிய மன்னார் ஆயர்

மன்னார், ஓகஸ்ட் 20

“மன்னார் பொது மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரவேண்டுமென மன்னார் மறை மாவட்ட ஆயர் அ. ஞானப்பிரகாசம் ஆண்டகை ஜனாதிபதி அநுர குமாரவிடம் வலியுறுத்தினார்”என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவை மன்னார் மறைமாவட்ட ஆயர் அ. ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசியபோதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார் என்று மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் ஆயருக்குமான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி பணிமனையில் நடைபெற்றது. இதன்போது, மன்னார் மக்கள் எதிர் நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆயர் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், கனிய மணல் அகழ்வு தொடர்பான பிரச்னைகளையும் அதனால் மக்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பாதிப்புகளையும் ஆயர் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினார்.

இதறகு பதிலளித்த ஜனாதிபதி, கனிய மணல் அகழும் செயல்பாடு முற்றாக நிறுத்தப்படும் என்று உறுதியளித்தார்.

மேலும், மின் சக்தியை பெறுவதற்காக மன்னாரில் காற்றாலை அமைக்கும் செயல்பாடுகளால் எழுந்துள்ள பாதிப்புகள் மற்றும் இந்தத் திட்டத்துக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் போராட் டங்கள் தொடர்பிலும் 11

# முத்துஐயன்கட்டு சம்பவம்: மற்றொரு சிப்பாயும் கைது!

## கைதான நால்வருக்கும் மறியல்

முல்லைத்தீவு, ஓக. 20

முத்துஐயன்கட்டு குளத்தில் இருந்து இளைஞர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் மற்றோர் இராணுவ சிப்பாயும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் கைதான 4 சிப்பாய்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நடைபெற்றது.

இதன்போது, சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 3 இராணுவத்தினருடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சிப்பாயும் ஒட்டுசுட்டான் பொலிஸாரால் நீதிமன்றில் 11

# நீதிமன்ற கட்டமைப்பை அரசு அரசியல்மயப்படுத்த முயற்சி

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 20

நீதிமன்ற கட்டமைப்பை அரசியல் மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டின் நீதித்துறை சுயாதீனமாக செயல்பட வேண்டும். அரசியல் தலையீடு இருத்தல்கூடாது. நீதித்துறையை அரசியல் மயப்படுத்தினால் பெரும் விளைவுகள் ஏற்படும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், “வரிகளை வரையறையற்ற வகையில் அதிகரித்து அரச வருமானம் அதிகரித்துக் கொள்ளப்பட்டுள்ளது. அரச சேவை முழுமையாக அரசியல் 11

# துப்பாக்கிச்சூடு: நேற்றும் ஒருவர் பலி!

கொழும்பு, ஓக. 20

கொழும்பில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார் என்று அறிய வருகிறது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பேலியகொடை மீன் சந்தைக்கு அருகே நடந்துள்ளது. இதில், கொழும்பு 15 அளுத் மாவத்தையை சேர்ந்த 45 வயதான நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் மீன் சந்தையில் பணிபுரிபவராவார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் சைக்கிளில் சென்ற ஒருவர் காயமடைந்தார் 11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# சஜித் பிரேமதாஸ தொடர்பான இரகசியங்களும் வெளிப்படும்

## அரசாங்கம் சொல்கின்றது

கொழும்பு, ஓக. 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்ற போது அப்போதைய அரசாங்கத்தில் மூன்றாவது முக்கிய நபராக இருந்த சஜித் பிரேமதாஸ, பொலிஸ் துறைக்கு பொறுப்பாக அப்போதிருந்த ரஞ்சித் மத்தும பண்டார தொடர்பில் கூற வேண்டிய இரகசியங்கள் பல உள்ளன - என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட குழுவினர் நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்து அது தொடர்பில் விவாதிக்கப்படுமானால் அது எமக்கு மிக்கமகிழ்ச்சியாகும்.

நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைத்தவர்கள் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது பாராளுமன்ற சம்பிரதாயமாகும். 11

# ரணிலுக்கு சி.ஐ.டி. அழைப்பு!

கொழும்பு, ஓக. 20

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குற்ற புலனாய்வுப் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. என்று அறியவந்துள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த ஜூன் 11ஆம் திகதி, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் 11

# வடக்கிலும் கிழக்கிலும் வெப்பம் அதிகரிக்கும்!

கொழும்பு, ஓக. 20

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்திலும் இன்றைய தினம் அதிக வெப்பம் நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இது மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயரக்கூடும் என்றும் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பமான வானிலை நிலவும்.

எனவே, மக்கள் அதிகநேரம் வெயிலில் 11

# “ஆதாரங்களை திரட்டுவதற்கு அனுமதியுங்கள்”

ஜெனிவா, ஓக. 20

இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் - செயல்திட்ட அதிகாரிகள் நாட்டுக்குள் பிரவேசிக்கவும் - விசாரணைகளை முன்னெடுக்கவும் - பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் சாட்சியங்களை சேகரிக்கவும் அரசாங்கம் இடமளிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கை 11

# தெல்லிப்பழை மருத்துவமனை ஊழல் சந்தேகநபர்கள் ஏன் கைதாகவில்லை?

## அர்ச்சுனா எம். பி. கேள்வி

கொழும்பு, ஓக. 20

தெல்லிப்பழை மருத்துவமனையில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் இதுவரையில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஏன் கைது செய்யப்படவில்லை - இவ்வாறு யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் கேள்வி எழுப்பினார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். மேலும்,

வடக்கு மாகாணத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான ஒரேயொரு மருத்துவமனையாக தெல்லிப்பழை மருத்துவமனை உள்ளது. இங்கு புற்றுநோய் பிரிவு தனியாக உள்ளது. இந்த மருத்துவமனை மாகாண அமைச்சின் கீழ்வரும் பி பிரிவு ஆதார மருத்துவமனையாகும். இங்கு கணக்காளர் ஒருவர் கடமையாற்றுவதில்லை.

இந்த மருத்துவமனை நேரடியாக பிராந்திய மருத்துவமனை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் கேதீஸ்வரனின் கீழும் மற்றும் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் சமன் பத்திரணவின் கீழும் நிர்வகிக்கப்படுகிறது.

இந்த மருத்துவமனையில் புற்றுநோய் பிரிவுக்கு பொறுப்பான 11

# பண சூதாட்ட ஒழுங்குபடுத்தல் அதிகார சட்டம் நிறைவேறியது

கொழும்பு, ஓக. 20

பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டமூலம் திருத்தங்களுடன் நேற்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.




இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் நடைபெற்றிருந்தது.

பணச் சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபை சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம், நாட்டில் பந்தயம் கட்டுதல், பணச் சூதாட்ட நிறுவனங்களை தரநிலைப்படுத்தல், சமூகத் தீங்குகளைக் குறைத்தல், சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல், பொருளாதாரத்தை வளர்ச்சியடைய செய்தல் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் சிறப்பாக நடந்த மாம்பழத் திருவிழா!

படங்கள் : சிவசாந்தன்

யாழ்ப்பாணம், ஒக. 20

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் 22ஆம் நாளான நேற்று செவ்வாய்க்கிழமை காலை மாம்பழத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

காலை 6.45 மணியளவில் நடைபெற்ற வசந்தமண்டப பூசையை தொடர்ந்து பிள்ளையாரும் முருகபெருமானும் வெளிவீதியுலா வந்து மாம்பழ திருவிழா நடைபெற்றது.

நாரதர் சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும் ஒரு மாம்பழத்தை கொடுத்தார். அதனை யாருக்கு கொடுப்பது என தீர்மானிக்க, முதலில் உலகை சுற்றி வருபவருக்கே இந்த மாம்பழத்தை தருவோம் என சிவபெருமானும் உமாதேவியாரும் பிள்ளையாருக்கும் முருகனுக்கும் கூறினார்கள்.

உடனே முருகபெருமான் மயில் மீதேறி உலகை சுற்றி வர சென்ற போது பிள்ளையார் சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுற்றி வந்து நீங்களே என் உலகம் என கூறி மாம்பழத்தை பெற்றுக்கொண்டார்.

உலகை சுற்றி வந்த முருகனுக்கு மாம்பழம் கிடைக்காததால் ஆபரணங்கள், உடை அனைத்தையும் துறந்து பழனி மலையில் போய் அமர்ந்தார்.

எனும் புராண கதையை மையமாக வைத்தே இந்த திருவிழா நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# சாவகச்சேரி நகர சபையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஊடகவியலாளர்

தென்மராட்சி, ஒக. 20

சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்திலிருந்து ஊடகவியலாளர் ஒருவர் நகர பிதாவின் பணிப்பின்பேரில் வெளியேற்றப்பட்டார்.

நேற்றைய தினம் நகர பிதா வடிவேலு சிறிபிரகாஷ் தலைமையில் சபை கூடியது.


இதன்போது, கடந்த கூட்டம் தொடர்பான அறிக்கை வாசிக்கப்பட்டபோது, நகர சபை உப தலைவர் ஞா. கிசோர் கேள்விகளை எழுப்பினார்.

அந்தச் சமயம் உரையை நிறுத்திய நகர பிதா, அங்கிருந்த ஊடகவியலாளரை வெளியேறுமாறு சபை ஊழியர்களை பணித்துள்ளார்.

இதையடுத்து, சபை அமர்வுகளில் ஊடகவியலாளர் பங்கேற்க அனுமதியில்லை என்று கூறியே அவர் வெளியேற்றப்பட்டார்.

எனினும், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து சபைகளிலும் ஊடகவியலாளர்கள் சபை அமர்வில் கலந்து கொள்ள அனுமதி உள்ளது. இந்த நிலையில், சாவகச்சேரி நகர பிதாவின் இந்த செயல்பாடு பல தரப்பினரின் கண்டனத்தையும் பெற்றுள்ளது. (ஐ-03)

# பெருந்தொகை ரவைகள் கொடிகாமத்தில் மீட்பு!



தென்மராட்சி, ஒக. 20

தண்ணீர் குழாயை மண்ணில் புதைப்பதற்காக நிலத்தை வெட்டியபோது பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

நேற்று செவ்வாய்க்கிழமை கொடிகாமத்தில் இந்தத் துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன.

நிலத்தை வெட்டியபோது, சந்தேகத்துக்கு இடமான முறையில் உரப்பை ஒன்று தென்பட்டது. இதையடுத்து, பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் உரப் பையை சோதனையிட்டபோது பெருந்தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டன. அந்த உரப்பையில் கோர்வையாகவும் தனியாகவும் 1,393 துப்பாக்கி ரவைகள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட துப்பாக்கி ரவைகளை நீதிமன்றில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# கண்ணீரில் நனையவைத்த தண்ணீரின் கதை நாடகம்!



யாழ்ப்பாணம், ஒக. 20

நல்லூர் திருவிழாவையொட்டி நீர்வள கண்காட்சியில் அரங்கேறிய தண்ணீரின் கதை நாடகம் பார்த்தவர்களை கண்ணீரில் நனைய வைப்பதாக அமைந்தது.

நல்லூர் முருகன் ஆலய திருவிழாவை முன்னிட்டு "நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி" எனும் தொனிப் பொருளில் வடக்கின் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி நல்லூரில் நடைபெற்று வருகிறது.

மக்கள் மயப்படுத்தப்பட்ட நீர்வளப் பாதுகாப்புக்கான திட்டத்தின் ஏற்பாட்டில் நீர்வள சபை, நீர்ப் பாசன திணைக்களம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, யாழ். மாநகர சபை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம், யாழ். இந்துக் கல்லூரி மற்றும் தன்னார்வலர் அமைப்புகளின் கூட்டு முயற்சியாக இரண்டாவது தடவையாக இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது.

பாரதியார் சிலை அருகேயுள்ள நெசவு கைத்தொழில் பயிற்சி நிறுவன வளாகத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி வரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.


இதில், நீர்வளக் கண்காட்சியின் ஒரு கட்டமாக ஊருணி ஆற்றுகை களத்தில் பல்வேறு ஆற்றுகை நிகழ்வுகளும், கலந்துரையாடல்களும் தினமும் மாலை வேளையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் செம்முகம் செம்முகம் ஆற்றுகைக் குழுவின் "தண்ணீரின் கதை" நாடக ஆற்றுகை நடைபெற்றது.

நிலத்தடி நீரை மட்டும் நம்பியிருக்கும் யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் தண்ணீர் இல்லாமல் போனால் என்னவாகும் என்பதனை சித்தரிக்கும் வகையில் நாடகம் உயிர்ப்புள்ளதாக அமைந்தது. பார்வையாளர்களை கண்ணீரில் நனைய வைத்த நாடகத்தின்பின்னர் பலரின் அனுபவ பகிர்வுகளும் உருக்கமாக அமைந்திருந்தன.

நிலத்தடி நீரும் எமது பிரதேச நிலக்கட்டமைப்பு மற்றும் வழுக்கையாறு திட்ட மாதிரிகளின் கண்காட்சிகள், விஞ்ஞான விளக்கங்கள், ஆய்வு முடிவுகள், விளையாட்டுகள், புதிர்ப்போட்டிகளில் பங்கேற்கும் சிறார்களுக்கான ஏராளமான பரிசுப் பொருட்களுடன் நிலத்தடி நீரை பக்குவமாக பாதுகாக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை இக்கண்காட்சி ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேநேரம், இன்றைய தினம் இந்தக் கண்காட்சியில் "யாழ். குடாநாட்டில் குளங்கள்", என்ற தலைப்பில் கட்டடக் கலைஞர் இ. மயூரநாதனின் கருத்துரையும் தொடர்ந்து கலந்துரையாடலும் நடைபெறும். (ஐ)

# வவுனியா பல்கலையில் வியாபார கற்கை மாநாடு



வவுனியா, ஒக. 20

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கை நெறியின் ஆறாவது ஆராய்ச்சி மாநாடு நேற்றும் நேற்று முன்தினமும் வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதன் ஒரு கட்டமாக பல்கலைக்கழக வியாபார பீடத்தின் சகல கற்கைநெறிகள் தொடர்பாக தொழில் துறை நிபுணத்துவம் பெற்ற நிறுவனங்களை இணைத்து உயர் தரம் கற்கும் மாணவர்களிற்கான தொழில் வழிகாட்டல் பயிற்சி பட்டறை நடைபெற்றது. அத்துடன், தொழில் முயற்சியாளர்களின் விற்பனை கண்காட்சியும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. அற்புதராஜா, வியாபார கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் வை. நந்தகோபன், விரிவுரையாளர்கள், துறைசார் நிபுணர்கள், விரிவுரையாளர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-10)

# நித்யசிறீ மகாதேவன் பங்கேற்கும் தெய்வீக சுகானுபவம் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக. 20

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு, யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள "தெய்வீக சுகானுபவம்-11" நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கந்தர்மடம் நல்லூர் கோட்டட (பழைய கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியசாலை) மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் உள்ளூர் கலைஞர்களின் கலைநிகழ்வும் இந்திய கலைஞர்களான திருமதி கிரண்மயி மடுப்பு மற்றும் அவரின் குழுவினரின் பரதநாட்டியம், திருமதி நித்யசிறீ மகாதேவன் மற்றும் அவரின் குழுவினரின் கர்நாடக இசைக் கச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.08.2025 புதன்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 04
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இராணுவ பிரசன்னத்தை குறைப்பது பற்றி...!

வடக்கு, கிழக்கில் காணப்படும் அதிகரித்த இராணுவ பிரசன்னத்தை எதிர்த்து இலங்கை தமிழ் அரசு கட்சி ஹர்த்தால் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அது பல்வேறு சர்ச்சைகளுடன் வெற்றியின்றி முடிவுற்றது. இதில் பரிதாபத்துக்குரிய தரப்புகள் என்றால் தமிழர் முற்போக்கு கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளைத்தான் குறிப்பிட முடியும். வடக்கு, கிழக்கிலுள்ள கட்சிகளின் நிலை - இலங்கை தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் உள்சிக்கல்கள் எதனையும் அறியாமல் தமிழ் அரசு கட்சியின் ஹர்த்தாலுக்கான அறிவிப்பை ஆதரித்து - இறுதியில் மூக்குடைபட்டிருக்கின்றன.

ஒருநாள் அமர்க்களமும் அதனடிப்படையிலான சர்ச்சைகள் அனைத்தும் ஓய்ந்துவிட்டன. இனி அடுத்தது என்ன? வடக்கு, கிழக்கில் தேவைக்கு அதிகமாக இராணுவம் நிலைகொண்டிருப்பது தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு உண்மையிலேயே கரிசனை இருந்தால் அதனைக் கையாளும் வழிமுறை தொடர்பில் ஆராய வேண்டும். இதற்காக அனைத்துக் கட்சிகள் கூட்டமொன்றை ஏன் ஏற்பாடு செய்ய முடியாது? அனைவரும் ஒன்றுபட்டு இதனை எவ்வாறு கையாளலாம் என்பது பற்றி ஆராயுங்கள்.

பாதுகாப்பு நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்து வடக்கு, கிழக்கில் எங்கெல்லாம் நாட்டின் தேசிய பாதுகாப்பு தேவைகளுக்கு அப்பால் இராணுவம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்யுங்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடன் உரியவாறு பேச்சு மேற்கொள்ளுங்கள். அவ்வாறில்லாது ஒருநாள் அமர்க்களங்களை மேற்கொண்டு விட்டு, பின்னர் எப்போதாவது ஏதும் சம்பவங்கள் நிகழ்ந்தவுடன் கடையடைப்பு என்றவாறான காலாவதியாகிப்போன அணுகுமுறைகளை விடுத்து - ஆக்கபூர்வமாக சிந்தித்து - தூரநோக்கோடு செயல்படுவது பற்றி இனியாவது சிந்தியுங்கள்.

அரசியலைக் கையாளும் வழிமுறைகள் தொடர்பில் 'ஈழநாடு' பலவற்றை தொடர்ந்தும் பேசி வந்திருக்கிறது. தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள ஓர் ஊடகமென்னும் வகையில் நாம் எமது எல்லைக்குள் விடயங்களை சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். ஆனால், அரசியல் கட்சிகளின் தலைமைகள் தொடர்ந்தும் பாராமுகமாகவும் பொறுப்பற்றும் இருந்தால் எவராலும் எதனையும் செய்ய முடியாது.

தமிழ் சூழலிலுள்ள பிரச்னை மிகவும் சிக்கலானது. ஒரு சமூகத்தில் அரசியல் தலைமைகள் தூரநோக்கற்றும் - பொறுப்பற்றும் செயல்படும் போது சமூக அக்கறையுள்ள சிவில் சமூகக் குழுக்கள் தார்மீக தலையீடுகளைச் செய்வார்கள். ஆனால், இங்கு இரண்டுமே பிரச்னையாக இருக்கின்றன. இதன் காரணமாகத்தான் மக்கள் நலன் சார்ந்து எந்தவொரு விடயமும் முன்னோக்கி நகரவில்லை.

மக்கள் நலனை முன்னிறுத்தி சிந்தித்தால் இது கையாள்வதற்கு கடினமான விடயமும் அல்ல. ஆனால், தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் எவையுமே அரசியலை கையாள்வது தொடர்பில் சிந்திக்கவில்லை. மாறாக, பிரச்னைகளை பிரச்சினைகளாகப் பேணிக்கொள்வது பற்றியே சிந்திக்கின்றன.

# அதிபரின் சிறந்த தலைமைத்துவமே மாணவரிடத்தே மாற்றத்தை ஏற்படும்!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம்;ஒக.20

ஒவ்வொரு பாடசாலை அதிபரும் சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் உயர்வான தலைமைத்துவத்தை பாடசாலைகளுக்கு வழங்கவேண்டும். அதன் ஊடாக எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் - என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

'தூய்மை இலங்கை' செயல்திட்டத்தின் 'இதயபூர்வமான யாழ்ப்பாணத்துக்கு' என்னும் தலைப்பில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிகழ்வின் ஓர் அங்கமாக யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வை ஆரம்பித்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் மூன்று விடயங்களில் பிரதானமாக கவனம் செலுத்தியுள்ளது. வறுமை தணிப்பு, எண்ணிமபடுத்தல் (டிஜிற்றல் மயமாக்கல்), தூய்மை இலங்கை என்ற அந்த மூன்று விடயங்களில் தூய்மை இலங்கை என்ற செயல்திட்டம் மிகப் பிரதானமானது.

எமது சுற்றாடலையும், எம்மையும் சுத்தமாக வைத்திருப்பது மாத்திரம் இதன்நோக்கம் அல்ல. எமது சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். தனி நபரிலிருந்து அது ஆரம்பித்து சமூகம் வரை மாற்றம் நீண்டு செல்ல வேண்டும். சட்டத்தை மதிக்கின்ற சமூகமாக, கண்ணியமான - ஒழுக்கமுள்ள சமூகமாக நாங்கள் மாற வேண்டும்.

மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாங்கள் முன்மாதிரியாகச் செயல்பட வேண்டும். எதிர்கால தலைமுறையை உருவாக்குகிறவர்கள் நீங்கள். ஒவ்வொரு பாடசாலை அதிபரும் சிறப்பான தலைமைத்துவத்தை தங்கள் பாடசாலைகளுக்கு வழங்கினாலே போதும். தலைமைத்துவம் மிக முக்கியமானது. சிறந்த தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்கின்ற நிறுவனங்கள் மேலோங்கிச் செல்வதை நாங்கள் பல இடங்களில் நேரில் கண்டிருக்கின்றோம்.

எனவே, ஒவ்வொரு பாடசாலை அதிபரும் சிறந்த தலைமைத்துவ பண்புகளுடன் உயர்வான தலைமைத்துவத்தை பாடசாலைகளுக்கு வழங்கவேண்டும். அதன் ஊடாக எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களிடத்தில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் - என்றார். (ஐ)

# 17ஆவது நாளாகவும் நேற்று மன்னாரில் மக்கள் போராட்டம்

மன்னார், ஒக. 20

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை 17 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் பனங்கட்டிக்கொட்டு, ஜிம் பிரவுண் நகர், எமில் நகர், இத்திக்கண்டல், தலைமன்னார் கிராமம் ஆகிய கிராம மக்களும், மீனவர்களும் கலந்துகொண்டு ஆதரவு வழங்கினர்.

இந்தப் போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம்பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.


மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஒரு மாத கால அவகாசம் கோரியுள்ள நிலையில் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன் வைத்துள்ளதோடு, ஜனாதிபதி உரிய தீர்வை வழங்காது விட்டால் போராட்டம் தொடரும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் எச்சரித்துள்ளனர். (ஐ)



நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா காலத்தில் ஓம் தொலைக்காட்சி நடத்திவரும் சைவம் தழைத்தோங்க நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நடன நிகழ்ச்சியின் பதிவு.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். பயணங்கள் சிறப்பாக அமையும். புதுஏஜென்சி எடுப்பீர்கள்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன் மனைவிக்குள் வீண் சந்தேகம் வந்து செல்லும். உத்தியோகத்தில் எதிர்ப்புகள் நீங்கும்.

**கடகம்**
பழைய கசப்பான சம்பவங்களை பேசிக் கொண்டிருக்க வேண்டாம். அண்டை அயலார் சிலரின் செயல்பாடுகளால் கோபம் எரிச்சல் அடையலாம். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள்.

**சிம்மம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக நாடுவீர்கள். இனிமையான நாள்.

**கன்னி**
உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகளின் கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் தருவீர்கள். விஐபிகளால் ஆதாயமடைவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும்.

**விருச்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மன உளைச்சல் ஏற்படும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும்.முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியம் வேண்டாம்.

**தனுசு**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். சகோதரர்கள் ஒற்றுமை பெருகும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மகரம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள்.

**கும்பம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**
எதிர்பார்த்த சில வேலைகள்தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். மகளுக்கு நல்லவரன் அமையும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நன்மை கிட்டும் நாள்.

# ஆதீனத்தில் தெய்வீகக்கலை அர்ச்சனையில் பஜனை நிகழ்வும் மிருதங்க சமர்ப்பணமும்

யாழ்ப்பாணம், ஒக. 20

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் கடந்த 29 ஆம் திகதி தொடக்கம் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10. 00 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வை நடத்தி வருகின்றது. அந்தவகையில் இன்று 20 ஆம் திகதி புதன்கிழமை தம்பாட்டி சிறீ முத்துமாரி அம்மன் பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ்வும் சைந்தவி கேதீசனின் பாட்டு நிகழ்வும் பானு ஜன் வசந்தபாலனின் இசை அர்ச்சனை நிகழ்வும் மிருதங்க சமர்ப்பணமும் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்த னன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# துர்க்காதேவி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 20

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 06.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

குழு இசை நிகழ்ச்சியில் இசை அர்ச்சனை அக்கடமி மாணவர்களின் பாட்டு நடைபெறும். அணி செய் கலைஞர்களாக வயலின் - வாசுகி சுவாமிநாத சர்மா, நந்தினி சுவாமிநாதசர்மா,மிருதங்கம் - எஸ். சுவாமிநாத சர்மா, சு. அரவிந்த சுப்ரமணிய சர்மா சு. அனந்த நாராயண சர்மா,

இசை அரங்கு நிகழ்ச்சியில் பாட்டு - கலாநிதி ந. வி. மு. நவரத்தினம், வயலின்- இராசரத்தினம் நிறோசன், மிருதங்கம் - வரதராஜ சர்மா றமண சர்மா, கெஞ்சிரா - றமண சர்மாலய சர்மா, மோசிங் - றமண சர்மா காமிருதசர்மா, (ஐ)

# "அண்டகோசப் படலம்" நீர்வேலியில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 20

யாழ்ப்பாணம், நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமிகோவில் நடத்தும் வாராந் தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 35ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் வரும் 22ஆம் வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் "அண்டகோசப் படலம்"என்னும் விடயப்பொருளில் நிகழ்த்துவார். சொற்பொழிவிலிருந்து

நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# தெய்வீகத் திருக்கூட்ட தொடர் நிகழ்வில் இசை அர்ச்சனை, விசேட சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 20

நல்லூர் கந்தன் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 23 ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று 20 ஆம் திகதி புதன்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறும்.

வேதாந்த மடம் சிறீசிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க சுழிபுரம் சிவசுப்பிரமணிய ஆலயப் பிரதம குரு சிவாகமகலாநிதி சிவசிறீ ந. பிரசாந்தக் குருக்களின் தலைமையில் இத்திருக்கூட்ட நிகழ்வு நடைபெறும்.

முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அருளானந்தம் உமாமகேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

யாழ். மாவட்ட செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் இலங்கைநாதன் சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி தர்மாம்பிகை ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக நெட்டிலிப்பாய் சிறீ கணேசா அறநெறிப் பாடசாலையின் தலைவரும் நெட்டிலிப்பாய் பிள்ளையார் ஆலயச் செயலாளருமாகிய சு.விஸ்வநாதன், காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலையின் மேனாள் பொறுப்பாசிரியருமாகிய அ. பரிமளா ஆகியோர் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை நல்லூர் பிரதேச செயலக பிரிவின் கோண்டாவில் கைலாசநாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலை மற்றும் நெட்டிலிப்பாய் சிறீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்குவர்.

வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரபேந்திர ராசா நகுலா நிகழ்த்துவார்.

சிறப்பு நிகழ்வுகளாக அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலாளர், சைவப்புலவர் செ. த. குமரனின் "அருணகிரிநாதரும் திருப்புகழும்" என்ற தொனிப்பொருளில் சொற்பொழிவும் கொழும்பு, இசை அர்ச்சனை அக்கடமி மாணவி வாசுகி சுவாமிநாதன் சர்மா மற்றும் மாணவி நந்தினி சுவாமிநாதன் சர்மா ஆகியோரின் வயலின் இசை நிகழ்வும் நடைபெறும். (எ)

# நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் அருளுரை

யாழ்ப்பாணம், ஒக. 20

சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகளால் கொடியேற்றம் முதல் தீர்த் தோற்சவம் வரை தினமும் இரவு 08. 00 மணி முதல் 08. 30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில்அருளுரை நடத்தப்படுகின்றது.

இன்று 20 ஆம் திகதி புதன்கிழமை "எந்தாயும் தந்தையும் நீ", நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை "வென்றவரோடு உறும் வேலவனே!", நாளை மறுதினம் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை "குருவாய் வருவாய்" என்ற தலைப்பில் அருளுரை நடைபெறவுள்ளது. (எ)

# உடுவிலில் விசேட நடமாடும் சேவை 1526 பேர் பங்கேற்று பயன்பெற்றனர்

யாழ்ப்பாணம், ஒக. 20

கிளீன் சிறீலங்கா செயல் திட்டத்தின் கீழ் கடந்த 15 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விசேட நடமாடும் சேவையில் 1526 பொதுமக்கள் வருகை தந்து 1903 சேவைகளைப் பெற்றுக் கொண்டனர் என்று யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆடை உற்பத்திக்கு பிரித்தானியாவில் பூச்சிய வரி!

கொழும்பு, ஓக. 20

**பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்காக, பரந்த அளவிலான பொருட்களுக்குக் குறைந்த அல்லது பூச்சிய வரிகள் உட்பட இலவச வர்த்தக நிபந்தனைகள் வழங்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் தெரிவித்துள்ளது.**

இந்த வசதி ஆடைப் பொருளைச் சார்ந்திருக்கும் என்று இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதரகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆடை உற்பத்தியாளர்களுக்கு, பிரித்தானிய சந்தையில் முன்னோடியில்லாத அணுகலை வழங்கும் தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக விதிகளின் விவரங்களைப் பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

தாராளமயமாக்கப்பட்ட விதிகளின் கீழ், புதிய வசதிகள் 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து செயல்படுத்தப்படும்.

வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தை மேம்படுத்துவதன் மூலம் புதிய விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக பிரித்தானிய அரசாங்கம் சுட்டிக் காட்டுகிறது.

அதன்படி, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் இப்போது பிரித்தானியாவில் வரி இல்லாமல் நுழைய அனுமதிக்கப்படும்.

இதன் கீழ், ஆடைகள் மற்றும் துணிகளுக்கான செயலாக்கத் தேவைகள் குறைந்தபட்சமாகக் குறைக்கப்படும்.

இது இரண்டு குறிப்பிடத்தக்க உற்பத்தி செயல்முறைகள் (துணி மற்றும் ஆடை உற்பத்தி) இலங்கையில் நடைபெற வேண்டும் என்ற தேவையை நீக்கும் என்று பிரித்தானிய அரசாங்கம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தின் வளரும் நாடுகளின் வர்த்தகத் திட்டத்தின் கீழ் இந்த வசதியிலிருந்து இலங்கை பயனடையும்.

பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதற்காக, பரந்த அளவிலான பொருட்களுக்குக் குறைந்த அல்லது பூச்சிய வரிகள் உட்பட இலவச வர்த்தக நிபந்தனைகள் வழங்கப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்திலிருந்து உள்ளீடுகளைப் பெற்றால், இலங்கை ஆடைகளுக்கு வரி இல்லாத அணுகலை தற்போதைய விதிகள் வழங்குகின்றன, மேலும் ஆடைகள் அல்லது துணி உற்பத்தியில் கட்டுப்பாடுகளும் உள்ளன.

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் அண்ட்ரூ பேட்ரிக், இந்த மாற்றங்கள் இலங்கை ஆடைத் துறையில் குறிப்பிடத்தக்க நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும், மேலும் பிரித்தானியாவின் முக்கிய சந்தையில் ஆடை விலைகளைக் குறைக்கவும் உதவும் எனத் தெரிவித்தார்.

பிரித்தானிய வணிக சபையின் தலைவர் மார்க் சர்ஜெனர், வரவிருக்கும் மாற்றங்கள் பிரித்தானியாவுக்கான இலங்கை ஏற்றுமதியை மேலும் வலுப்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

இது இலங்கை ஆடைத் துறைக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகும்.

புதிய மாற்றங்கள் பிரித்தானியாவுக்கான இலங்கை ஆடை ஏற்றுமதிகளில் பெரும்பாலானவை பூச்சிய வரிக்குத் தகுதி பெற அனுமதிக்கும்.

பிரித்தானிய வணிக சபை இந்த மாற்றங்களை வலுவாக ஆதரிக்கிறது மற்றும் பிரித்தானியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்தை மேம்படுத்துவதற்காக வணிகங்களுடன் எங்கள் பணியைத் தொடர எதிர்நோக்குகிறது.

புதிய தளர்வுகள் இலங்கை உற்பத்தியாளர்கள் பிரித்தானியா மற்றும் உலகளாவிய சந்தைகளில் மிகவும் திறம்படப் போட்டியிட உதவும் என்று பிரித்தானிய அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

வளரும் நாடுகளுக்கான வர்த்தக ஏற் பாட்டின் கீழ் 65 வளரும் நாடுகளுக்கு புதிய வசதிகள் உள்ளன.

பல தயாரிப்பு வகைகளில் குறிப்பிடத்தக்க கட்டணக் குறைப்புகளுடன் மேம்படுத்தப்பட்ட முன்னுரிமைகளைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்டுள்ளது. (அ)

## குற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட 748 பேர் கைது!

கொழும்பு, ஓக. 20

நாடளாவிய ரீதியாக நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின் போது குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும், சட்டவிரோத மதுபானம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்கள் தொடர்பாகவும் சந்தேகத்தின் பேரில் மொத்தம் 748 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 26,560 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் போது குற்றச் செயல்களுடன் நேரடியாக தொடர்புடைய 18 நபர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

அதே நேரத்தில் நிலுவையில் உள்ள பிடியாணைகளுடன் தொடர்புடைய 528 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அறிக்கையின்படி, மொத்தம் 64 குடிபோதையில் வாகனம் செலுத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலும் 26 பேர் பொறுப்பற்ற ரீதியாக வானம் செலுத்தியதற்காக கைது செய்யப்பட்டனர்.

பல்வேறு போக்குவரத்து விதிமீறல்களை மீறிய 3,675 நபர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களைக் கைது செய்ய நாடு முழுவதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ)

## 5.94 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சிகரெட்டுகளுடன் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 20

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 5.94 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சட்டவிரோத வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

டுபாயிலிருந்து குறித்த சிகரெட்டுகளை வாங்கியவர்கள் குவைத் விமானத்தினூடாக இலங்கைக்கு வந்துள்ள நிலையில் வெளிநாட்டு சிகரெட்டுகளின் பெரிய பொதியுடன் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையைச் சேர்ந்த 33, 45 வயதான தொழிலதிபர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டபோது அவர்களிடம் 39,600 சிகரெட்டுகள் அடங்கிய 198 அட்டைப் பெட்டிகளில் வெளிநாட்டு சிகரெட்டுகள் இருந்துள்ளன. இதேவேளை, சந்தேக நபர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

(அ)

## தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் கைது!

கொழும்பு, ஓக. 20

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லோலுவ நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அவரைக் கைது செய்வதற்கான பிடியாணையை உத்தரவினை நேற்று முன் தினம் பிறப்பித்ததன் பின்னணியில் இந்த கைது இடம்பெற்றுள்ளது.

கொழும்பு குற்றப்பிரிவு முன்வைத்த உண்மைகளை பரிசீலித்த பின்னர், கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன இந்த பிடியாணையை உத்தரவினை பிறப்பித்தார்.

நாரஹேன்பிட்டி பகுதியில் துசித ஹல்லோலுவவின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சம்பவம் குறித்து கொழும்பு குற்றப்பிரிவு அண்மையில் விசாரணையைத் தொடங்கியது.

அந்த விசாரணை தொடர்பாக பொலிஸார் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பின்னர், நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (அ)

## கோழிப்பண்ணையிலிருந்து நபர் ஒருவரின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஓக. 20

புப்புரஸ்ஸ ரஜத்தலாவ பகுதியில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

ரஜதலாவ, கேடகும்புரே கெதரவைச் சேர்ந்த 60 வயதுடைய அட்டும் முதியன்சலாகே டிக்கிரி பண்டா என்ற இரண்டு குழந்தைகளின் தந்தை இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறந்தவர் குறித்த கோழிப் பண்ணையில் பணிபுரிந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த நபரின் மனைவி வெளிநாட்டில் வேலை செய்கின்ற நிலையில் அவரது இரண்டு பிள்ளைகளும் திருமணமாகி வேறு பகுதிகளில் வசித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

நேற்று காலை கோழிப்பண்ணையில் பணிபுரியும் மற்றொரு நபர், கோழிப்பண்ணையில் அவர் இறந்து கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் அளித்துள்ளார். மரணத்திற்கான காரணம் இன்னும் வெளியாகாத நிலை யில் கம்பளை புப்புரஸ்ஸ பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 10 பேர் கைது!

கொழும்பு, ஓக. 20

கம்பஹா மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள நபர்கள் குழு ஒன்று ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன் போது 10 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பரக்கந்தேனிய, தலுவகொடுவ மற்றும் கட்டான ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தனித்தனி சோதனைகளின் போது, ஒரு ரிப்பீட்டர் வகை துபபாக்கி, கைத்துப்பாக்கி, ஒன்பது ரி-56 மகசின்கள், 183 ரி-56 தோட்டாக்கள், 280 9 மி.மீ. தோட்டாக்கள், ஒரு வாள் மற்றும் 300 கிராம் ஐஸ் போதைப் பொருள்ஆகிய வற்றை பொலிஸார் மீட்டனர்.

இதன்போது, சந்தேக நபர் கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு காரையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

(அ)

## தேசிய இணைய வழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையம் ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 20

இணையவழித் தாக்குதல்கள் காரணமாக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் அபாயங்களை குறைக்கும் நோக்கில் தேசிய இணையவழிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையம், இலங்கை கணணி அவசரப் பதிலளிப்பு நிறுவனம் மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ் செயல்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் இணையவழித் தாக்குதல்கள் மற்றும் அனுமதியின்றிய நுழைவுகளை அடையாளங் காண முடியும் எனவும், அரச நிறுவ னங்கள் வழங்கும் அத்தியா வசிய சேவைகள், தனிப்பட்ட தரவுகள், தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுச் சுகாதாரம் பாதுகாக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இணையவழித் தாக்குதல்கள் மற்றும் குற்றச்செயல்கள் மூலம் ஏற்படும் பாதிப்புகளை குறைத்து, அரச நிறுவனங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## ஜனாதிபதிகளின் உரித்துரிமை சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் 3 மனுக்கள் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்)" சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு 3 மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப் பின்போதே இதனை சபைக்கு அறிவித்தார்.

அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளன அவர் கூறினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகை கடன் திட்டத்தை அறிமுகப்படுத்த ஒப்புதல்

கொழும்பு, ஓக. 20

விவசாய மற்றும் கைத்தொழில் துறைகளில் இளைய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக சலுகைக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்த அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பாதீட்டில் இதற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் பயனாளியொருவருக்கு அதிகபட்சம் 50 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்படும். இதற்காக, கடனில் எஞ்சியுள்ள தொகைக்கு 4விகிதம் ஆண்டு வட்டியாக அறவிடப்படவுள்ளது.

இந்த கடன் திட்டத்தின் மூலம், 50,000 விவசாய தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதனை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் இணைந்து விவசாய அமைச்சு இதனை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்பாசன சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# தெற்கை போன்று வடக்கில் ஏன் மோசடி விசாரணைகள் இல்லை?

## இராமநாதன் அர்ச்சுனா கேள்வி

கொழும்பு, ஓக. 20

வடக்கில் இடம்பெற்றுள்ள நிதி மோசடி தொடர்பாக அரசாங்கம் இதுவரையில் எந்த நடவடிக்கையினையும் எடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, நேற்று சபையில் குற்றம் சுமத்தியதுடன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் பல கேள்விகளை முன்வைத்தார்.

குறிப்பாக தெற்கில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் நிதி மோசடிகளுக்கான வழக்குகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ஆனால் வடக்கில் அவ்வாறு இல்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குறிப்பிட்டார்.

எனவே தற்போதைய அரசாங்கம் அரசியல் பழிவாங்கலை மாத்திரமே முன்னெடுப்பதாக, மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாக இராமநாதன் அர்ச்சுனா கூறினார்.

இதற்குப் பதிலளித்த பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால " குறித்த விடயம் தொடர்பில் தனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தேவைப்படுவதாகத் தெரிவித் துள்ளார்.

அத்துடன் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தால் அல்லது சி.ஐ.டிக்கு முறைப்பாடு செய்திருந்தால் அது தொடர்பான விவரங்களை தன்னிடம் வழங்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு என்பது, சுயாதீனமாக இயங்குகின்ற ஆணைக்குழு எனவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வருவதில்லை எனவும், எனினும் இரண்டு நாட்களுக்குள் இதற்கான பதிலை தான் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சஷீந்திரவின் மறியல் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 20

ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்ட போதே சஷீந்திர ராஜபக்ஷவை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் மேலும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சொத்தை ஊழல் மற்றும் தவறாகப் பயன்படுத்தியது தொடர்பான விசாரணைக்காக ஓகஸ்ட் 06 ஆம் திகதி இலஞ்ச ஒழிப்பு ஆணையகம் அவரை கைது செய்தது.

செவனகலையில் அமைந்துள்ள ஒரு நீர்த்தேக்கத்துக்கு அருகில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலத்தில் சட்ட விரோதமாக ஒரு பண்ணை கட்டடத்தை கட்டியதாக சஷீந்திர ராஜபக்ஷ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2022 மே 09 அன்று 'அரகலய' போராட்டத்தின் போது இந்தக் கட்டடம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக் காணி இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமானது என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இருப்பினும், அந்தக் கட்டடத்தை மீண்டும் கட்டுவதற்கான ஒப்புதலைப் பெறுவதற்காக, தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ராஜபக்ஷ அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் ஊழல், சதித்திட்டம் மற்றும் அரசு சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியதாகக் கூறி, இலஞ்ச ஒழிப்பு ஆணையகம், அரசு சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தியது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவரைக் கைது செய்தது. (அ)

# முடிவுகளுக்கு உடன்பட்டால் மாத்திரம் தபால் தொழிற்சங்கங்களுடன் பேச்சு!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஓக. 20

**கைரேகை வருகை மற்றும் மேலதிக நேர ஊதியம் தொடர்பான அரசாங்க முடிவுகளுக்கு தபால் தொழிற் சங்கங்கள் உடன்பட்டால் மட்டுமே அவர்களுடன் சந்திப்பு நடத்தத் தயாராக இருப்பதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

குறுகிய கால வேலைநிறுத்தங்கள் கூட தபால் துறைக்கு நிதி இழப்பை ஏற்படுத்தும். நீடித்த வேலைநிறுத்தங்கள் திறைசேரியை சீர்குலைத்து எதிர்கால சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளைப் பாதிக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின்னரான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

தபால் தொழிற்சங்கங்கள் முன்வைத்த 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளை அரசாங்கம் தீர்த்து வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலதிக நேரக் கொடுப்பனவுகளில் மாற்றங்கள் மற்றும் கைரேகை முறையை திரும்பப் பெறுதல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நாடளாவிய வேலைநிறுத்தத்தைத் தொடங்கினர்.

இந்த வேலைநிறுத்தம் நாடு தழுவிய முக்கிய சேவைகளை சீர்குலைத்துள்ளது. (அ)

# இலங்கை மின்சாரசபை சட்டமூலத்தை சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்!

கொழும்பு, ஓக. 20

இலங்கை மின்சார சபைச் (திருத்தச்) சட்டமூலத்தில் தனது கையொப்பத்தையிட்டு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன சான்றுரைப்படுத்தினார்.

கடந்த 06ஆம் திகதி இலங்கை மின்சார சபைச் (திருத்தச்) சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு அமைய இலங்கை மின்சார சபைச் (திருத்தச்) சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் (திருத்தச்) சட்டமாக அமுலுக்கு வருகின்றது.

இதன் ஊடாக, தேசிய மின்சார மதியுரைப் பேரவைக்குப் பதிலாக மின்வலு மீதான தேசியக் கொள்கையின் பாகமொன்றாக தேசிய மின்சாரக் கொள்கையைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகளுக்கு இடமளிக்கின்றது.

மேலும், தொடர்ச்சியான விநியோகம், வினைத்திறனான மற்றும் செலவுச் சிக்கனமான மின்சார விநியோகம், பச்சை வீட்டு வாயுவின் வெளியேற்றத்தைக் குறைத்தல் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு "மொத்தவிற்பனை மின்சாரச் சந்தை" என்பது "தேசிய மின்சாரச் சந்தை" என்று மாற்றப்படுகின்றது. (அ)

# சதீஷ் கமகேயின் விளக்கமறியல் உத்தரவு நீடிப்பு!

கொழும்பு, ஓக. 20

பொலிஸ் திணைக்களத்தின் கலாச்சாரப் பிரிவின் பதில் பணிப்பாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சதீஷ் கமகேயை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சதீஷ் கமகே நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே, நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்கு முவினால் கடந்த 14 ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும்!

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஓக. 20

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் கட்டளைத் தளபதியாக பதவி வகித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவைவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்க முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும் என பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் உள்ள பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்களுக்கு கூட்டுப்பொறுப்பு உள்ள தால் அமைச்சர்களுக்கு எதிராக மாத்திரம் தான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டும் என ஆளும் தரப்பின் இளம் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் புலமையை வெளிப்படுத்துகிறது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் தான் பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இருப்பினும் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

சம்பிரதாயத்தின் பிரகாரமே நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எவ்வித வரையறைகளும் கிடையாது.

பாராளுமன்றத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்,முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஆகவே அமைச்சரவை அமைச்சர்களுக்கு எதிராக மாத்திரம் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவில்லை என்பதை ஆளுங்கட்சி விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது.

அதற்கு போலியான காரணிகளை குறிப்பிடுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துடன் இராணுவத்தின் ஒருசில அதிகாரிகள் தொடர்புப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால குற்றஞ்சாட்டினார்.

பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவரது தரப்பினர் கிழக்கு மாகாணத்தில் அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

அக்காலப்பகுதியில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக அருண ஜயசேகர பதவி வகித்தார்.

இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திக் கொண்டு கட்டளைத் தளபதியாக பதவி வகித்த அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க அரசாங்கம் முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும்.

இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தலை அரசு உடன் நடத்தவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

**மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளது.**

மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்நாள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் பொறுப்புக்கூற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாதாள குழுக்களின் எழுச்சிக்கு கடந்த அரசாங்கங்கள் பொறுப்புக்கூற வேண்டும் என குறிப்பிட்டுள்ள கருத்து அவதானத்துக்குரியது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் பாதாள குழு தலைவர்கள் நாட்டை விட்டு ஓடி தலைமறைவானார்கள்.

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான தீர்மானங்களை கடந்த அரசாங்கங்கள் எடுக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு பாதாள குழுக்களை பாதுகாத்தது.

அதன் விளைவை இன்று நாடு எதிர்கொள்கிறது.பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன.பொலிஸாரின் முன்பாக துப்பாக்கிதாரிகள் தமது இலக்கினை நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.பொதுமக்களின் பாதுகாப்பு அலட்சியப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாதாளக்குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

இலங்கையின் அரச நிர்வாக கட்டமைப்பில் பாராளுமன்றம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதானமானவையாக காணப்படுகின்றன.மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்ப ட்டுள்ளது. இதற்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.



மாகாணசபைத் தேர்தல் முறைமையை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிக்குள்ளாக்கினார்.

இதற்கு தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது.ஜனாதிபதியின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவது சட்ட விரோதமானதுடன், ஜனநாயகத்துக்கும் விரோதமானது.

ஆகவே தேர்தலை நடத்த அரசாங்கம் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# அஞ்சல் பணியாளர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, ஓக. 20

அஞ்சல் பணியாளர்களின் பணிப்புறக்க்ணிப்பு இரண்டாவது நாளாகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதாக ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற் சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் எச்.ஆர். நிஹால் தெரிவித்துள்ளார்.

அஞ்சல் பணியாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் மத்திய அஞ்சல் பரிமாற்றகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அஞ்சல் திணைக்களத்தின் அனைத்து செயல்பாட்டு மையங்களும்தற்போது மூடப்பட்டுள்ளன.

எங்கள் போராட்டம் வெற்றி கரமாக தொடர்கிறது.

எங்கள் போராட்டம் வெற்றிகரமாக முன்னேறும் நிலையில், அஞ்சல் நிர்வாகம் ஊடகங்களில் பல்வேறு போலி வதந்திகளை பரப்பி வருகிறது.

தொழிற்சங்கங்கள் விடுத்த 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டதாகவும் தொழிற்சங்கங்கள் மேலதிக நேரத்திற்கும் கைரேகை இயந்திரத்திற்கும் எதிராகவே போராடுகின்றன என்றும் கூறுகின்றனர்.

தபால் நிர்வாகத்தின் இந்த கூற்றை நாங்கள் முழுமையாக நிராகரிக்கிறோம்.மேலதிக நேரம் இல்லாமல் அஞ்சல் திணைக்களத்தில் பணிப்பணிகளை நடத்த இயலுமா? என்பதை அஞ்சல்மா அதிபரும், அஞ்சல் நிர்வாகமும் நன்றாகவே அறிவார்கள்-என்றார். (அ)

# குறிஞ்சாத்தீவு உப்பளத்தை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, ஓக. 20

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போர்ச்சூழல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குறிஞ்சாத்தீவு (ஆனையிறவு வடக்கு) உப்பளத்தின் உற்பத்தி மற்றும் தொழிற்பாடுகளை அரச தனியார் பங்குடைமை முறைமையின் கீழ் ஆரம்பிப்பதற்காக உள்நாட்டு முதலீட்டாளர்களிடம் முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பினும், அதன்மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு இயலாமல் போயுள்ளது.

அதனால், குறிஞ்சாத்தீவு உப்பளத்தின் உற்பத்தி நடவடிக்கைகளை அரச தனியார் பங்குடமை முறைமையின் கீழ் மீண்டும் ஆரம்பிப்பதற்காக சர்வதேச முன்மொழிவு விருப்பக் கோரல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்திஅமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

ஜனாதிபதி செயலகம் முன்

# சமிக்ஞை கம்பத்தின் மேல் ஏறிய நபரினால் பரபரப்பு!

கொழும்பு, ஓக. 20

போக்குவரத்து சமிக்ஞை கம்பத்தில் நபரொருவர் ஏறியிருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொழும்பு - ஜனாதிபதி செயலகத்திற்கு எதிரே உள்ள போக்குவரத்து சமிக்ஞை கம்பத்தின் மேல் நபரொருவர் நேற்று முன் தினம் ஏறியுள்ளார்.

போக்குவரத்து சமிக்ஞை மேல் ஏறிய நபர் விசித்திரமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்திற்கு முன்னால் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதால் ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஓர் ஆர்ப்பாட்டமாக இருக்கலாம் என்று பேசப்பட்டு வருகின்றது.

எனினும் குறித்த நபர் சமிக்ஞை கம்பத்தில் ஏறியதற்கான காரணம் எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

திடீரென நபரொருவர் சமிக்ஞை கம்பத்தின் மேல் ஏறியிருந்த சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

கம்பத்தில் ஏறிய நபரை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதேவேளை பொரளையில் கடந்த வாரம் நபரொருவர் மின் விளக்குக் கம்பத்தில் ஏறியிருந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டார். (அ)

# சட்டவிரோதமாக சொத்துகளை ஈட்டும் பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 20

சட்டவிரோதமாக சொத்துக்களை ஈட்டும் பொலிஸ் அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

82,000 இற்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகளில், மிகக் குறைந்த எண்ணிக்கையிலானோர் ஊழல், சட்டவிரோத மற்றும் சமூக விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

எந்தவொரு அதிகாரியின் இதுபோன்ற செயல்களுக்கு இடமளிக்க முடியாது என்று வலியுறுத்திய அவர், ஊழல் மற்றும் இலஞ்சம் வாங்கும் பொலிஸ் அதிகாரிகளை தொடர்ந்து கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

புதிய பொலிஸ்மா அதிபரின் முக்கிய நோக்கம் பொது மக்களுக்கு நம்பகமான பொலிஸ் சேவையை உருவாக்குவதாகும் என்றும் ஊழல் அதிகாரிகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அனைத்து பொலிஸ் அதிகாரிகளும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும், குறிப்பாக அனைத்து பணியாளர் தர அதிகாரிகளும் வருடத்திற்கு ஒரு முறை தங்கள் சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் சொத்துக்கள் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சட்டவிரோதமாக சொத்துக்கள் ஈட்டப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். (அ)

# மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால் பிரச்னைகள் ஏற்படும்!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஓக. 20

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாட்டில் பிரச்சினைகள் ஏற்படும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

பிரிவினைவாத கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கும் எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த இலங்கை மின்சாரசபை திருத்தச் சட்டத்தை தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தது.மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கவாதியான கடுவலை மாநகர சபையின் தற்போதைய மேயர் ரஞ்சன் ஜயலால் சட்டவரைவை தீ வைத்து கொளுத்தினார்.

காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த சட்டத்தில் போலியான திருத்தங்களை செய்து அண்மையில் இலங்கை மின்சாரசபை திருத்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டது.

அன்று எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இன்று முழுமையான ஆதரவளித்துள்ளார்கள்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இவ்விடயம் தொடர்பில் ஏதும் பேசுவதில்லை.அண்மையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சாரசபை திருத்தச் சட்டத்தினால் இலங்கையின் மின்சாரம் மற்றும் வலுசக்தித்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும்.வலுசக்தி துறையின் சுயாதீனத்தை பிற நாடுகளுக்கு விட்டுக்கொடுத்து நாட்டின் இறையாண்மையை அரசாங்கம் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பிரிவினைவாத கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத்தேர்தலுக்கான அறிவிப்பை அரசாங்கம் விடுக்கும்.மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாட்டில் தேவையில்லா பிரச்னைகள் ஏற்படும்.அண்மையில் நிறைவேற்றப்பட்ட மின்சார திருத்தச் சட்டத்தால் வலுசக்தி துறையின் தனியுரிமை கூறாக்கப்படும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் கல்முனை காதி நீதிபதி கைது!

## உடந்தையாக செயல்பட்ட மனைவியும் சிக்கினார்

கல்முனை, ஓக. 20

**இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியும் அவருக்கு உடந்தையாக செயற்பட்ட அவரது மனைவியும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியில் இயங்கி வந்த கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட பெண் தனது வழக்கு ஒன்றுக்காக குறித்த அலுவலகத்துக்கு சென்று வந்த நிலையில் தன்னிடம் இலஞ்சமாக பணம் கேட்கப்படுவதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு புலனாய்வு அதிகாரிகளிடம் கடந்த மாதம் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

குறித்த முறைப்பாட்டுக்கமைய மாறுவேடத்தில் மருதமுனை பகுதியில் இயங்கி வந்த காதி நீதிமன்ற நீதிபதியின் வீட்டில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு அருகில் அதிகாரிகள் காத்திருந்தனர்.

இதன்போது முறைப்பாட்டினை வழங்கிய அப்பெண் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய கல்முனை காதி நீதிமன்ற நீதிபதியிடம் சென்று குறித்த இலஞ்ச பணத்தை தருவதாக கூறி 300 ரூபாவை நீதிபதியின் மனைவியிடம் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறுவேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிபதி மற்றும் மனைவியை கைது செய்ததுடன் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு சந்தேக நபர்களை கொண்டு சென்றனர். (எ- 01)

# முத்துநகரில் கிரவல் அகழ்வு உடன் தடுத்து நிறுத்தப்பட்டது

திருகோணமலை, ஓக. 20

முத்துநகர் கிராமத்தில் தனியார் கம்பனிக்கு தாரைவார்க்கப்பட்ட விவசாய காணிகளில் இடம்பெற்று வந்த சட்டவிரோத கிரவல் அகழ்வு உடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவில் உள்ள முத்துநகர் பகுதியின் விவசாய நிலம் தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்ட நிலையில் அப்பகுதியில் சட்ட விரோதமாக கிரவல் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் ஆராய பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர அப் பகுதிக்கு நேற்று முன்தினம் சென்றிருந்தார். இதன்போது பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர், புவிச்சரிதவியல் சுரங்கப் பணியக அதிகாரிகள், இலங்கைத் துறைமுக அதிகார சபை அதிகாரிகள், விவசாயத் துறைசார் உத்தியோகத்தர்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் எனப் பலரும் அங்கு பிரசன்னமான நிலையில் கிரவல் மண் அகழ்வை தற்காலிகமாக நிறுத்தினார். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதியமைச்சர், இப்பகுதியில் அண்மையில் சட்ட விரோதமாக மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் பொலிஸாருக்கு அறிவித்து தற்காலிகமாக நிறுத்தியுள்ளோம்.

பல வருடங்க ளாக இம் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். மக்க ளுக்கு விவசாயம் செய்வதற் கான உரிமையும் இருக்கின்றது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். பல வருடங்களாக விவசாயத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் தற்போது நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த சில இடங்களில் வேலைத் திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுவில் எடுத்த தீர்மானங்களின் பிரகாரம் நாங்கள் நிறுவனங்கள் வேலைத் திட்டங்களை ஆரம்பிக்காத பிரதேசங்களில் விவசாய செய்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரைகளை விடுத்திருந்தோம். சரியான முறையில் ஆராய்ந்து பிரதேச செயலாளர் மூலமாக வேண்டுகோளை விடுக்கின்றோம்.

மக்கள் பிரதி நிதி என்ற ரீதியில் இங்கிருக் கின்ற பல்வேறு பட்ட சட்டச் சிக்கல்களாகவோ அடிப்படை உரிமைகளாகவோ இருக்கலாம் இதனை சரியான வகையில் ஆராய்ந்து தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டிய கடமை எமக்கு இருக்கிறது.

அதனை மையப் படுத்தி உறுதியாக இருக்கிறோம்- என்றார்.

முத்துநகர் மக்கள் திருகோணமலை மாவட்ட செயலகம் தொடக்கம் ஜனாதிபதி செயலகம் வரை தங்கள் விவசாய பூமியை மீட்க பல போராட்டங்களை நடத்தி வந்துள்ளனர். தற்போது சூரிய மின் சக்தி உற்பத்திக்கு வழங்கப்பட்ட விவசாய நிலத்தை மீளப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-12)

# துரித அபிவிருத்தி குறித்து விசேட கலந்துரையாடல்

சாய்ந்தமருது, ஓக. 20

அம்பாறை மாவட்டத்தின் துரித அபிவிருத்தி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தலைமையில் நேற்று முன்தினம் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

சாய்ந்தமருதில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் பர்ஹான் மொஹமட், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விரைவில் புத்திஜீவிகள் மற்றும் துறைசார் வல்லுநர்கள், தொழிலதிபர்கள், ஆர்வலர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உள்ளடக்கலான மகா சபையொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் அதனூடாக ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு துரித அபிவிருத்திகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. (எ)

# வீட்டுக்கு தீ வைத்த உரிமையாளர் கைது

மட்டக்களப்பு, ஓக. 20

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓட்டமாவடி 3 ஆம் வட்டாரம் எம். கே. வீதியிலுள்ள வீடொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை திடீரென தீப்பற்றி எரிந்தது.

குடும்பத் தகராறு காரணமாக இந்தத் தீ வைப்பு சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸாரின் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. இதனையடுத்து வீட்டு உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கல்முனையில் ஒருவர் கைது

கல்முனை, ஓக. 20

அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரை பள்ளிச் சந்தியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கல்முனை விசேட அதிரடிப் படையின ரால் ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப் படை அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் சாய்ந்தமருது 01 பகுதியைச் சேர்ந்த 21 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து ஒரு கிராம் 70 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ)

# கஞ்சா, பணத்துடன் நான்கு பேர் கைது

சம்மாந்துறை, ஓக. 20

அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லரிச்சல் பகுதியில் கஞ்சாவை விற்பனை செய்த நான்கு சந்தேக நபர்களை சம்மாந்துறை ஊழல் தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


சம்மாந்துறை ஊழல் தடுப்புப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் கல்லரிச்சல், தனமல்வில, உடங்கா, புளக்ஜே மேற்கு பகுதிகளைச் சேர்ந்த 45, 63, 40 மற்றும் 22 வயதுடையவர்கள் என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர் ஒருவரிடமிருந்து 350 கிராம் கஞ்சாவும் மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 250 கிராம் கஞ்சாவும் மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 1400 மில்லிகிராம் கஞ்சாவும், மற்றைய சந்தேக நபரிடம் இருந்து 1000 மில்லிகிராம் கஞ்சா மற்றும் ஒரு தொகை பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)

# வீரமுனையில் வீதி பெயர்ப்பலகை வைப்பதை தடுத்து நிறுத்திய பிரதேசசபை உறுப்பினர்கள்

## அவர்களுக்கு சாதகமாக செயல்பட்ட பொலிஸார் - மக்கள் குற்றச்சாட்டு




வீரமுனை, ஓக. 20

அம்பாறை மாவட்டத்தின் வீரமுனை பகுதியில் வீரமுனையின் பெயரைக்குறிக்கும் பெயர்ப்பலகையிடுவதை சம்மாந்துறை பிரதேசசபை உறுப்பினர்கள் சிலர் தடுத்து நிறுத்தினர்.

அம்பாறை - கல்முனை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிரதான வீதியில் வீரமுனை ஆண்டியர் சந்தியில் இந்த பெயர்ப்பலகையை நடும் செயற்பாடுகளை நேற்றுக் காலை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் முன்னெடுத்தனர்.

எனினும், அங்குவந்த சம்மாந்துறை பிரதேசசபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளின் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தினர்.

இது தொடர்பில் சம்மாந்துறை பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்ட நிலையில் அங்குவந்த பொலிஸாரும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு சாதகமான முறையில் செயற்பட்டதாக வீரமுனை மக்கள் கூறினர்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான வீதியில் பெயர்ப்பலகை நடுவதற்கு பிரதேசசபையிடம் எந்த அனுமதியும் பெறத்தேவையில்லாத நிலையில் இரண்டு பிரதேச சபை உறுப்பினர்கள் இந்த செயற்பாடுகளை முன்னெடுத்தமை தொடர்பில் பிரதேச மக்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

ஏற்கனவே வீரமுனை வரவேற்பு கோபுரம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் அதனை போலியான காரணங்கள் கூறி தடுத்தவர்கள் மீண்டும் அதேவேலையை செய்துள்ளதாகவும் அப் பகுதி மக்கள் கூறினர்.

சம்மாந்துறை பிரதேசசபையில் உள்ள சில உறுப்பினர்கள் தொடர்ச்சியாக வீரமுனையின் அடையாளத்தை இல்லாமல் செய்யும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதாகவும் இது கண்டனத்துக்குரியது எனவும் அம்பாறை மாவட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசெம்பர் 28ஆம் திகதி மியன்மாரில் தேர்தல்

## இராணுவ ஆட்சித் தலைவர் அறிவிப்பு



நேபிடோவ், ஒக. 20

மியன்மாரில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் பொதுத் தேர்தல் பல கட்டங்களாக நடத்தப்படும் என்று இராணுவ ஆட்சித் தலைவர் மின் ஆங் ஹ்லைங் அறிவித்துள்ளார்.

மியன்மாரில் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழ்த்து விட்டு 2021ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதனையடுத்து ஆங் சான் சூகி உள்ளிட்ட ஆளுங்கட்சி தலைவர்களை கைது செய்து வீட்டுச் சிறையில் அடைத்தனர். இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புகள் கிளம் பின. மேலும் மீண்டும் பொதுத் தேர்தலை நடத்தக் கோரி மக்கள் போராட்டத்தில் குதித்தனர். கடந்த 4 ஆண்டுகளாக இந்தப் போராட்டம் நீடித்து வரும் நிலையில் தேர்தலை நடத்துவதற்கான சூழல் தற்போது உருவாகியுள்ளது. இதன்படி, எதிர்வரும் டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் பல கட்டங்களாக தேர்தல் நடத்தப்படும் என்று இராணுவ ஆட்சித் தலைவர் தெரிவித்தார். (எ)

# மழை, வெள்ளப்பெருக்கால் பாகிஸ்தானில் 657 பேர் பலி

லாகூர், ஒக. 20

பாகிஸ்தானில் கனமழை, வெள்ளப்பெருக்கில் சிக்கி இது வரை 657 பேர் பலியாகினர்.

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிர மடைந்து வருகிறது. குறிப்பாக, அந்த நாட்டின் கைபர் பக்துவா, சிந்து, பஞ்சாப் ஆகிய மாகாணங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. மேலும், பல பகுதிகளில் மேகவெடிப்பு ஏற்பட்டுள்ளது.

கனமழையால் பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்கியுள்ளனர். இதேவேளை கனமழை, வெள்ளத்தால் உயிரிழப்பு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இந்த நிலையில், பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழை யால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 657 ஆக அதிகரித்தது. இதில் 171 குழந்தைகள், 94 பெண்களும் அடக்கம். மேலும் கனமழை, வெள்ளத்தில் சிக்கி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தா னில் கனமழை 22ஆம் திகதி வரை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ஆற்றில் படகு கவிழ்ந்ததில் 40 பேர் உயிரிழந்தனர்

## நைஜீரியாவில் பெரும்சோகம்

அபுஜா, ஒக. 20

நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள் ளானதில் 40 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள நாடு நைஜீரியா. இந்த நாட்டில் படகு போக்கு வரத்து அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில், அந்த நாட்டின் சொஹொடா மாகாணம் கடா கிராமத்தை சேர்ந்த 50 பேர் நேற்று முன்தினம் மதியம் ஆற்றில்படகு மூலம்கொரொண்யா பகுதியில் உள்ள சந்தைக்கு சென்றனர். அப்போது எதிர்பாராத விதமாக ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் 10 பேரை உயிருடன் மீட்டனர். ஆனாலும், இந்த விபத்தில்40 பேர்ஆற்றில் அடித்து செல்லப்பட்ட நிலையில் அவரகளைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விபத்து நடைபெற்று 24 மணிநேரத்துக்கு மேலான நிலையில் ஆற்றில் அடித்து செல்லப்பட்ட 40 பேரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. (எ)

# தாய்வான்மீது சீனா போர் தொடுக்காது

வாஷிங்டன், ஒக. 20

நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை தாய்வான் மீது சீனா போர் தொடுக்காது என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் கூறுகையில், "சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெளிவாக என்னிடம் சொன்னார். நான் ஜனாதிபதியாக இருக்கும் வரை தாய்வான்மீது சீனா போர்தொடுக்காது என நினைக்கிறேன். பொறுத்திருந்து பார்ப்போம். சீனா இந்த விவகாரத் தில் மிகவும் பொறுமையாக இருப்பதாகவும் ஜின்பிங் என்னிடம் சொன்னார்"- என்று ட்ரம்ப் கூறினார். (எ)

# இனி ஒரு போர் நடக்கக்கூடாது

## உக்ரைனின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் ஜெலன்ஸ்கிக்கு ட்ரம்ப் உத்தரவாதம்



வாஷிங்டன், ஒக. 20

**உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இப்படி ஒரு நிலை ஏற்பட்டதில்லை. இதுபோன்று இனி ஒரு போர் நடக்கக்கூடாது என்று ஜெலன்ஸ்கியிடம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் போர் சர்வதேச சமூகத்தை கவலை கொள்ளச் செய்துள்ளது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தீவிரமாக முயன்று வருகிறார். எனவே, ரஷ்ய ஜனாதிபதி புடினை கடந்த 15ஆம் திகதி சந்தித்து இது குறித்து பேசினார்.

அமெரிக்காவின் அலாஸ்காவில் நடைபெற்ற இந்த சந்திப்பு சர்வதேச அளவில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனால், ட்ரம்ப் - புடின் இடையே நடந்த இந்த பேச்சுவார்த்தையில் உக்ரைன் போர் நிறுத்தம் குறித்து முடிவு எட்டப்படவில்லை. இருப்பினும் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாக இருந்ததாக இரு தலைவர்களும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பரபரப்பான சூழ்நிலையில் நேற்று முன்தினம் ட்ரம்ப்புடன் ஜெலன்ஸ்கி சந்தித்து பேசினார். வெள்ளை மாளிகைக்கு சென்ற ஜெலன்ஸ்கியை ட்ரம்ப் வரவேற்று அழைத்து சென்றார்.

இந்தச் சந்திப்பை தொடர்ந்து ட்ரம்ப் கூறுகையில்,இங்கு வருகை தந்த ஜெலன்ஸ்கிக்கு நன்றி. போரை முடிவுக்கு கொண்டுவர புடினும் விரும்புகிறார். இது வரை 6 போர்களை நிறுத்தியுள்ளேன். விரைவில் உக்ரைனில் அமைதி திரும்பும். உலக நாடுகள் இந்த போரால் தளர்ந்து போய்விட்டன. இந்தப் போர் உடனடியாக முடிவுக்கு வரும் என நம்புகிறேன். இது தொடர்பில் ரஷ்யா- உக்ரைனுடன்இணைந்து அமெரிக்கா பணியாற்றும்.

போரில் அதிக மக்கள் உயிரிழக்கின்றனர், உக்ரைன் மக்களை நேசிக்கிறோம். இரண்டாம் உலகப் போருக்கு பின் இப்படி ஒரு நிலை ஏற்பட்டதில்லை, இதுபோன்று இனி ஒரு போர் நடக்கக் கூடாது.

புடினுடன் பேசினேன், இந்த சந்திப்புக்கு பிறகும் புடினுடன் பேசவுள்ளேன். புடின் ஒத்துழைப்பு வழங்குவார் என நம்புகிறேன். பேச்சுவார்த்தை கடினம், ஆனால் சாத்தியம். உக்ரைனின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும், இன்னும் இரு வாரங்களில் முடிவு தெரிந்துவிடும்- என்றார். இதனையடுத்து பேசிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ரஷ்யா போரை நிறுத்த வேண்டும். போரை நிறுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு நன்றி.

போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின் உதவி தேவை. இன்று கூட ரஷ்யா நடத்திய தாக்குதலில் ஒரு குழந்தை உயிரிழந்தது. பாதுகாப்பை உறுதி செய்யாமல் உக்ரைனில் தேர்தல் நடத்த முடியாது. இல்லாமல் தேர்தல் நடைபெற வேண்டும் என்று கூறினார். யாருடைய தலையீடும் இல்லாமல் தேர்தல் நடைபெற வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து 7 ஐரோப்பிய நாட்டுத் தலைவர்களுடன் ட்ரம்ப் குழு படம் எடுத்துக் கொண்டார். (எ)

# மருத்துவமனையை தாக்கியது இஸ்ரேல்

காஸா, ஒக. 20

ஹமாஸ் அமைப்பு ஆயுதக்கிடங்காக பயன்படுத்திய மருத்துவமனையை இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழித்தது.

காஸாவில் ஒன்றரை ஆண்டுகளாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 61ஆயிரத்து 900இற்கும் மேற்பட்ட பலஸ் தீனியர்கள் உயிரிழந்தனர். ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனை காஸா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

இந்த நிலையில், மத்திய காஸாவின் ஜெய்துன் பகுதியில் அமைந்த அல்-மாமதனி மருத்துவமனைக்கு வெளியே ஹமாஸ் அமைப்பின் பிரிவு ஒன்று செயல்பட்டு வந்துள்ளது.

இதனை வான்வழித் தாக்குதலில் இஸ்ரேல் பாதுகாப்புப் படை அழித்துள்ளது. (எ)

# "கிரிமியா, நேட்டோவை இனி மறந்து விடுங்கள்"

வாஷிங்டன், ஒக. 20

ரஷ்யாவிடமிருந்து கிரிமியாவை திரும்பப் பெறுவது, நேட்டோவில் உறுப்பு நாடாவது போன்ற எண்ணங்களை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கைவிட்டுவிட்டால், போர் நிறுத்தம் உடனடியாக சாத்தியப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெவித்துள்ளார்.

இது தொடர்பில் ட்ரம்ப் தனது ட்ருத் சமூக வலைத்தளப் பதிவில், "உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விரும்பினால் ரஷ்யாவுடனான போரை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர முடியும். போரை தொடர்ந்து நடத்த அவர் விரும்பினால், அவர் போராடலாம். இந்தப் போர் எப்படி தொடங்கியது என்பதை நினைத்துப் பாருங்கள். நேட்டோ அமைப்பில் உக்ரைனை இணைக்கக் கூடாது. சில விடயங்கள் ஒருபோதும் மாறாது.

அதேபோல்12 ஆண்டுகளுக்கு முன்னர் கிரிமியாவை ஓர் அமைதி ஒப்பந்தம் மூலம் ரஷ்யாவுக்கு வழங்கினார் ஒபாமா. அதை மாற்றமுடியும் என்று உக்ரைன் நினைக்கக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளார்.


ட்ரம்பின் இந்தக் கருத்துக்கு உடனடியாக எதிர்வினையாற்றிய உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, "கிரிமியாவை ரஷ்யாவுக்கு தாரை வார்த்தது போன்ற மொஸ்கோவுக்கான சலுகைகள் புடினை வலுப்படுத்தியுள்ளது. கிரிமியா இழப்பின் விளைவாக, அதன் பின்னர் இன்னும் சில கிழக்குப் பிராந்தியங்கள், அப்புறம் டான்பாஸை இழந்தோம். இவை புதுப்புதுத் தாக்குதல்களை எங்களை நோக்கி ஏவ புடினுக்கு புதிய உத்வேகம் தருகிறது. உக்ரைனுக்கு வாய் வார்த்தைகளாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் பலிக்கவில்லை. நாங்கள் போரை நிறுத்த விரும்புகிறோம். கூடவே, அது நீடித்த அமைதிக்கு வழிவகுக்க வேண்டும் என்றும் விரும்புகிறோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ்: சம்பியனானார் ஸ்வியாடெக்



சின்சினாட்டி, ஒக. 20

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடரில் இகா ஸ்வியாடெக் சம்பியனானார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்றது. இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நேற்று நடைபெற்றது. இந்தப் போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாடெக், இத்தாலியின் ஜஸ்மின் பலோனியுடன் மோதினார்.

இதில், தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு ஆதிக்கம் செலுத்திய இகா ஸ்வியாடெக் 7-5, 6-4 என்ற புள்ளிக்கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார். (எ)

## தோல்வியடைந்த சாண்டோஸ் தேம்பித்தேம்பி அழுத நெய்மர்



ரியோ, ஒக. 20

சாண்டோஸ் அணி படுதோல்வியடைந்த நிலையில் நட்சத்திர வீரர் நெய்மர் தேம்பி தேம்பி அழுதார்.


பிரேசிலிய சீரி ஏ உதைபந்தாட்டத் தொடரில் சாண்டோஸ் அணிக்காக நெய்மர் விளையாடி வருகிறார். இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வாஸ்கோ ட காமா மற்றும் சாண்டோஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் வாஸ்கோ ட காமா அணியிடம் 6 - 0 என்ற கோல் கணக்கில் சாண்டோஸ் அணி படுதோல்வியடைந்தது. இது நெய்மரின் தொழில்முறை வாழ்க்கையில் மிகப்பெரிய தோல்வியாகும்.

சமீபத்தில் காயம் காரணமாக பார்மை இழந்து தவித்துவரும் நெய்மர், சொந்த மண்ணில் நடைபெற்ற போட்டியில் எழுச்சி கொடுப்பார் என ரசிகர்கள் சூழ்ந்திருந்தனர். ஆனால், சாண்டோஸ் அணி ஒரு கோல் கூட அடிக்க முடியாமல் தோல்வியடைந்தது. எதிர்பார்ப்புடன் மைதானத்துக்கு வந்த பல ரசிகர்கள் பாதியிலேயே மைதானத்தை விட்டு வெளியேறினர்.

இந்த நிலையில் படுதோல்வியடைந்ததால் மைதானத்திலேயே அமர்ந்து நெய்மர் அழுதார். அவரை சகவீரர்களும் பயிற்சியாளரும் சமாதானம் செய்தபோதும் அழுதபடியே மைதானத்தை விட்டு வெளியேறினார். இந்த வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.

இந்தத் தொடர் முழுக்க மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் சாண்டோஸ் அணி 19 ஆட்டங்களில் 10 தோல்விகளைச் சந்தித்து பட்டியலில் 15ஆவது இடத்தில் நீடிக்கிறது. இந்தச் சூழலில் சாண்டோஸ் அணியின் பயிற்சியாளர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (எ)

## ஆஸியுடன் ஒருநாள் தொடர்: ரபாடா திடீரென விலகல்



கெய்ன்ஸ், ஒக. 20

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா விலகியுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

அடுத்ததாக இவ்விரு அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நேற்றுத் தொடங்கியது.

இந்த நிலையில், தென்னாபிரிக்க அணிக்கு பெரும் பின்னடைவாக அந்த அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ககிசோ ரபாடா அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார். வலது கணுக்காலில் ஏற்பட்ட வீக்கம் காரணமாக அவர் தொடரிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## சின்சினாட்டி ரென்னிஸ்: அல்காரஸ் சம்பியன்


சின்சினாட்டி, ஒக. 20

சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் இறுதிப் போட்டியில் ஜன்னிக் சின்னெர் பாதியில் விலகியதால் கார்லஸ் அல்காரஸ் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்காவில் நடைபெற்று வந்த சின்சினாட்டி ஓபின் ரென்னிஸ் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் தரவரிசையில் நம்பர் 1 இடத்தில் உள்ள இத்தாலியின் ஜன்னிக் சின்னெர், இரண்டாவது இடத்தில் உள்ள ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் உடன் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியின் முதல் செற்றில் அல்காரஸ் 5-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தபோது திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக சின்னெர் மேற்கொண்டு விளையாடாமல் விலகினார்.

இதனையடுத்து அல்காரஸ் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார். அத்துடன் சம்பியன் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. (எ)



## ஆஸி. - தென்னாபிரிக்கா ஒருநாள் தொடர் ஆரம்பம்




கெய்ன்ஸ், ஒக. 20

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா கைப்பற்றியது.

அடுத்ததாக இவ்விரு அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் நடைபெறுகிறது. இதன்படி அவுஸ்திரேலியா- தென்னாபிரிக்கா இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி கெய்ன்ஸ் நகரில் நேற்று நடைபெற்றது.

ரி - 20 தொடரில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்கும் முனைப்புடன் தென்னாபிரிக்க அணி ஆயத்தமாகியுள்ளது. மறுமுனையில் சொந்த மண்ணில் தொடரை வெற்றியுடன் தொடங்கு அவுஸ்திரேலியா வரிந்து கட்டும் என்பதால் இந்த போட்டி எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் கள் இழப்புக்கு 275 ஓட்டங்கள் எடுத்திருந்தது. (எ)

உலகக்கிண்ணத் தொடர்

# இந்திய மகளிர் அணி அறிவிப்பு எப்போது?

மும்பை, ஒக. 20

மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் இந்திய அணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளது.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்தியாவில் மகளிர் உலகக் கிண்ணத் தொடர் அரங்கேறுவது இது 4ஆவது முறையாகும்.

இதில் இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் பங்கேற்கின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்தியாவில் பெங்களூரு, கவுகாத்தி, விசாகப்பட்டினம், இந்தூரிலும் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மொத்தம் 31 ஆட்டங்கள் நடத்தப்படுகின்றன. பாதுகாப்பு பிரச்னை காரணமாக பாகிஸ்தான் அணிக்குரிய அனைத்து ஆட்டங்களும் இலங்கையில் நடைபெறுகின்றன. இதன் தொடக்க ஆட்டத்தில் இந்தியா- இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு எப்போது? என்பது குறித்து எந்தவித தகவலும் வெளிவராமல் இருந்தது. அத்துடன் ரசிகர்களும் உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய மகளிர் அணியில் யார்-யாரெல்லாம் இடம்பெறப்போகிறார்கள்? என்று எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய மகளிர் அணி இதுவரை உலகக் கிண்ணத்தை வென்றதில்லை. அதிகபட்சமாக 2005 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் இறுதிப்போட்டி வரை வந்து தோல்வியடைந்தது. (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பொலிஸ் அதிகாரிகளை பணி நீக்கத் திட்டம்!

கொழும்பு, ஓக. 20

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையான பொலிஸ் அதிகாரிகளை உடனடியாகக் கண்டறிந்து பணிநீக்கம் செய்வது குறித்து காவல்துறை மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முறையான திட்டம் தற்போது திட்டமிடப்பட்டுச் செயல்படுத்த தயாராகி வருவதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானதாகச் சந்தேகிக்கப்படும் அதிகாரிகள், சோதனைக்காக பொலிஸ் நிலைய மருத்துவமனை மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைக்குப் பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

எதிர்காலத்தில், போதைப்பொருள் பயன்படுத்தும் அதிகாரிகளை அடையாளம் காண பொலிஸ் நிலைய மட்டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரிகளுக்குப் போதைப்பொருள் சோதனைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கிடைத்த தரவுகளின்படி, பொலிஸ் துறையில் கணிசமான எண்ணிக்கையிலான அதிகாரிகள் தற்போது போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சமீபத்தில், போதைப்பொருள் பாவனைக்காக சுமார் 100 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(அ)

## வடக்கிலும்...

பணியாற்றுவதை தவிர்த்து, தண்ணீரை அதிகம் அருந்த வேண்டும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## முத்துஐயன்கட்டு....

முற்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணிகளான கெங்காதரன், தனஞ்சயன் உள்ளிட்ட வர்கள் கைதான இராணுவத்தினருக்கு பிணை வழங்கக்கூடாது என்று வலியு றுத்தினர்.

இந்த நிலையில் 4 சிப்பாய்களையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

முல்லைத்தீவு - முத்துஐயன்கட்டு - ஜீவநகர் கிராமத்தில் அமைந்துள்ள இராணுவ முகாம் அகற்றப்பட்டு வரும் நிலையில் கடந்த 7ஆம் திகதி இரவு இராணுவத்தினர் அழைத்து 5 இளைஞர்கள் அங்கு சென்றனர். இவ்வாறு சென்றவர்கள்மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இதில், மூவர் குளத்தில் குதித்து தப்பி வந்தனர். ஒருவர் இராணுவத்தினரின் தாக்குதலில் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். இந்த நிலையில், காணாமல் போன இளைஞர் மறுநாள் காலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சஜித்...

அவ்வாறு சமர்ப்பித்தால் அது குறித்த விவாதத்தின்போது தெரிவிப்பதற்கு பல விடயங்கள் எம் வசம் உள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் இதற்கு முன்னர் கூறியவற்றை விட மேலும் பல தகவல்கள் எம்மிடமுள்ளன. விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், பிரதி அமைச்சருக்கு எதிராக இவ்வாறான நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை முன்வைக்க முடியுமா இல்லையா என்பதை எதிர்க்கட்சி தெளிவுபடுத்த வேண்டும். அது எமது பிரச்னையல்ல.

பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு அமையவோ அல்லது இலங்கையின் பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு அமையவோ நம்பிக்கையில்லா பிரேரரணையை எதிர்க்கட்சிகள் சமர்ப்பித்தால், அது தொடர்பான விவாதத்தில் மிகவும் மகிழ்ச்சியாக நாம் பங்கேற்போம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்றபோது அப்போதைய அரசாங்கத்தில் மூன்றாவது முக்கிய நபராக இருந்த சஜித் பிரேமதாஸ, அப்போதைய பொலிஸ் அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தொடர்பில் கூற வேண்டிய இரகசியங்கள் பல உள்ளன.

அவற்றை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு ஒன்றை எதிர்க்கட்சிகள் உருவாக்கிக் கொடுக்குமெனில், அதனை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கிறோம். எனவே, அனைவரும் இணைந்து நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பியுங்கள் என்று எதிர்க்கட்சிகளை கேட்டுக் கொள்கிறோம் - என்றார். (ஐ)

## மன்னார்...

தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் குறிப்பாக, மக்களுடன் பேச்சு நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

வடக்கு மாகாண அரசாங்கத்தின் கீழ் உள்ள மன்னார் பொது மருத்துவமனையை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வர வேண்டும் என்றும் ஆயர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் உரிய அமைச்சர்களுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்துள்ளார் - என்றும் தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்தார். (ஐ)

## பண...

தொடர்பில் விரிவான அல்லது முழுமையான விடயப் பொறுப்பைக் கொண்ட சுயாதீனமான ஒழுங்குபடுத்தும் நிறுவனமாக பணச்சூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகார சபையை நிறுவ ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு அண்மையில் அரசாங்க நிதி பற்றிய குழுவும் அனுமதி வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நீதிமன்ற...

மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவையும் அரசியலாக்கப்பட்டு அரசியல் நியமனங்கள் வழக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற கட்டமைப்பையும் அரசியல்மயப்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது. நாட்டில் நீதித்துறை சுயாதீனமாக செயல்பட வேண்டும். அரசியல் தலையீடு இருத்தல்கூடாது. நீதித்துறையை அரசியல்மயப்படுத்தினால் பெரும் விளைவுகள் ஏற்படும்.

ஆளும் தரப்பில் முன்னிலையில் இருப்பவர்களின் வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். நாட்டு மக்கள் வெகுவிரைவில் பல விடயங்களை தெரிந்துகொள்வார்கள். நீதிமன்ற கட்டமைப்பை அரசியல் மயப்படுத்தினால் வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்கு வராது.

எதிர்க்கட்சியில் இருந்தபோது மக்கள் பக்கம் இருப்பதாகக் குறிப்பிட்டீர்கள். தற்போது அதிகாரத்தில் உள்ளீர்கள். ஆகவே மக்களின் தரப்பில் இருந்து செயல்படுங்கள்.

மத்திய வங்கியின் கையிருப்பு ட்ரில்லியன் கணக்கில் உயர்வடைந்துள்ளதாக ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். அவ்வாறாயின், ஏன் நெல்லை நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யாமல் உள்ளீர்கள்.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் எதிர்க்கட்சிகள்மீது பழிசுமத்துவதை பிரதான கொள்கையாக அரசாங்கம் கொண்டுள்ளது. விமர்சனங்களை தவிர்த்து விட்டு மக்களுக்காக செயல்படுங்கள் - என்றார். (ஐ)

## ரணிலுக்கு...

தொடர்பில் விசாரணைகள் நடந்து வரும் நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தெல்லிப்பழை...

மருத்துவர் கிருசாந்தி புற்றுநோய் பிரிவுக்கான தனிப்பட்ட பண கொடுக்கல் வாங்கல்களை செய்து கொண்ட வங்கி கணக்கு புத்தகங்கள் இரண்டு பிடிபட்டிருக்கிறது. அது தவிரவும், மருத்துவர் கேதீஸ்வரன் புற்றுநோய் பிரிவுக்கு மாகாண பொதுச் செயலாளரின் அனுமதியின்றி 3 கோடி ரூபாய் பெறுமதியான கட்டட ஒப்பந்தம் ஒன்றை முறையற்ற விதத்தில் மேற் கொண்டு இருப்பதும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்திருந்தும் இதுவரை சுகாதார அமைச்சினூடாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வாலும் (2025.06.03 ) முறையிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்ட பின்பும் கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.

இது, இந்த அரசாங்கம் தெற்கில் மட்டும் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை பயன்படுத்தி அரசியல் ரீதியான பழிவாங்கல்களை மேற்கொள்கின்றது என்பதற்கு சிறந்த உதாரணமாக பொதுமக்களால் எடுத்துக்கொள்ளப்படக் கூடும். இதனால் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரிடம் பின்வரும் கேள்விகளை கேட்க விரும்புகிறேன்.

அதாவது, இந்த விடயம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறையாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் (2025.06.03) இன்று வரை சம்பந்தப்பட்ட இரு மருத்துவர்களும் கைது செய்யப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

2015ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சம்பந்தப்பட்ட புற்றுநோய் பிரிவுக்குபொதுமக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட அரசாங்கத்தின் கணக்கில் வைப்பிலிடப்படாத பணம் எவ்வளவு? இந்த நிதி மோசடி தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிற்கு ஆராய அதிகாரம் உண்டா?

புற்றுநோய் மருத்துவர் கிருசாந்தியால்பிராந்திய பணிப்பாளர் நாயகம் மருத்துவர் கேதீஸ்வரனின் அனுசரணையுடன் பொதுமக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொள்ளப்பட்டது தங்களுக்கு தெரியுமா? அந்தப் பணம் தனிப்பட்ட வங்கி கணக்குகளில் இடப்பட்டு மருத்துவமனையிலிருந்து களவாடப்பட்டது தங்களுக்கு தெரியுமா? தெரிந்திருந்தால் ஏன் இன்றுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை?

ஒரு மருத்துவமனையின் மருத்துவர் பொதுமக்களிடம் இருந்து நன்கொடையைவைத்தியசாலை நிர்வாகத்துக்கு தெரியாமல் கேதீஸ்வரன் அனுசரணையுடன் பெற்றுக் கொண்டு நிதி நடவடிக்கையில் ஈடுபட முடியுமா?

இந்த விடயங்கள் தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களிலும் பாராளுமன்றத்திலும் மேலதிகமாக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிலும் முறைப்பாடு செய்யப்பட்டு இதுவரை சம்பந்தப்பட்ட வைத்தியர் கைது செய்யப்படாதது ஏன்?

தங்களுடைய அரசாங்கம் இவ்வாறான திட்டமிட்ட ஊழல்களுக்கு எந்த நடவடிக்கை எடுக்காமலும் விசாரணைகள் மேற்கொள்ளாமலும் இருப்பதற்கான காரணம் என்ன?

இனிமேலாவது இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட வங்கிக் கணக்குகள் ஆராயப்பட்டு சம்பந்தப்பட்ட கட்டட ஒப்பந்தம் ஆராயப்பட்டு அவர்களை கைது செய்து நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்த முடியுமா? - என்றார்.

அர்ச்சுனா எம். பியின் கேள்விகளுக்கு பதிலளிக்க பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால இரு வார கால அவகாசம் கோரினார். (ஐ)

## துப்பாக்கி...

என்று பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் இரு குழுக்களுக்கிடையே நீண்டகாலமாக நிலவும் மோதலே இந்தத் துப்பாக்கிச்சூட்டுக்கு காரணம் என்றும் உயிரிழந்த மீன் வியாபாரியே துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்களின் இலக்கு என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக சில பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஆதாரங்களை...

தொடர்பில் அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் மிகமோசமான சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும் நம்பகரமான உள்ளக பொறுப்புக்கூறல் பொறிமுறை எதுவும் அமுலில் இல்லாத நிலையில் நீதியை அடைந்துகொள்வதற்கு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழிகாட்டுவதற்கும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரின்போது இலங்கை விடயத்தில் பேரவைக்கும் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனைக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆணை மேலும் இரு வருடங்களுக்குப் புதுப்பிக்கப்படவேண்டும்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆட்சிப்பீடமேறி சுமார் ஒரு வருடம் பூர்த்தியடைந்திருக்கிறது. இலங்கையின் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை உரியவாறு நிறைவேற்றுவதாக வாக்குறுதி அளித்தபோதிலும் கரிசனைக்குரிய முக்கிய மனித உரிமைகள் விவகாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே எட்டப்பட்டுள்ளது. இதேபோன்று மிகப்பாரதூரமான அட்டூழியங்கள், மனித உரிமைகள் மீறலை பொறுத்தமட்டில் தண்டனைகளிலிருந்து விடுபடும்போக்கு இன்னமும் தொடர்கிறது.

ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளரை நாட்டுக்கு வருகை தருமாறு கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தது. இருப்பினும், ஆணையாளருடனான சந்திப்பின்போது தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை உறுதிசெய்வதிலும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதிலும் தாம் கொண்டிருக்கும் கடப்பாடும் குறித்தும் ஜனாதிபதி உரையாடினாரே தவிர, பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையால் முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வெளிப்படையாக ஆதரிப்பதற்குத் தவறியிருந்தார்.

ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டது முதல் "நல்லிணக்கம்" தொடர்பில் அநுர குமார திஸநாயக்க பலமுறை பேசியிருந்தார். ஆனால், பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தம்வசம் வைத்திருக்கும் அவரது அரசாங்கம் யுத்த காலப்பகுதியில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தை வெளிக்காட்டும் வகையில் எந்தவொரு நகர்வையும் மேற்கொள்ளவில்லை.

மேலும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், நாடளாவிய ரீதியில் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவிகளை அனுமதிக்க வேண்டும். அத்தோடு பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் காணாமல் போனோர் பற்றிய பணிமனையை மறுசீரமைக்கவோ அல்லது பதிலீடு செய்யவோ வேண்டும் - என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வடக்கு-கிழக்குப் பகுதியில் இருந்து படைமுகாம்களை அகற்றக்கூடாது! அக்மீமன தயாரத்ன தேரர்

கொழும்பு, ஓக. 20

" வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை அரசாங்கம் அகற்றக்கூடாது. அவ்வாறு அகற்றக்கோரி போராடுபவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

-இவ்வாறு லங்கா மக்கள் என்ற கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அக்மீமன தயாரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வடக்கு, கிழக்கில் 30 வருடகால போர் நிலவியது. உயிர் தியாகம் செய்தே படையினர் தாய்நாட்டை பாதுகாத்தனர். இந்நிலையில் வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறுகோரி போராட்டம் நடைபெறுகின்றது.

புலிகள் மற்றும் டயஸ்போராக்களுடன் தொடர்பு பட்டவர்களே இவ்வாறு வலியுறுத்துகின்றனர். இது பாரதூரமான தவறாகும். மக்களை குழப்பும் வகையில் செயற்படுதல், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல் என்பன தவறாகும்.

எனவே, இவர்களை கைது செய்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு சட்டத்தில் ஏற்பாடு உள்ளது.

ஹர்த்தால் தொடர்பில் அரசாங்கம் மௌனம் காக்கின்றது. வடக்கு, கிழக்கில் இருந்து எப்படி இராணுவ முகாம்களை அகற்ற முடியும்? முகாம்கள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள காணிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.-என்றார். (அ)

## 3 விமானப் படையினர் விபத்தில் சிக்கி காயம் !

கொழும்பு, ஓக. 20

ஹிங்குரக்கொட - மெதிரிகிரிய பிரதான வீதியில் கிம்புலாவல பிரதேசத்தில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வாகனம் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஹிங்குரக்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை 07.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தின் போது இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான வாகனத்தில் பயணித்த மூன்று விமானப் படை அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறிப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் ஹிங்குரக்கொட பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## ராஜிதவின் மனு நிராகரிப்பு!

கொழும்பு, ஓக. 20

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி தாக்கல் செய்த மனுவை கொழும்பு நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இலஞ்ச ஒழிப்பு ஆணைய விசாரணை தொடர்பாக தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணை உத்தரவினை தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி ராஜித சேனாரத்ன நேற்று முன் தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மாத தொடக்கத்தில், இலஞ்ச ஒழிப்பு ஆணையகத்தின் சமர்ப்பிப்புகளைத் தொடர்ந்து, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சேனாரத்னவை கைது செய்ய உத்தரவு பிறப்பித்தது.

முன்னாள் அமைச்சர் பல அழைப்பாணைகளுக்கு பதிலளிக்கத் தவறிவிட்டார் என்றும்,

அவரது பதவிக் காலத்தில் வழங்கப்பட்ட சர்ச்சைக்குரிய ஒப்பந்தம் தொடர்பாக வாக்குமூலம் அளிக்கத் தவறிவிட்டார் என்றும் புலனாய்வாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது ஒரு கொரிய நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தம் அரசுக்கு ரூ. 20 மில்லியனுக்கும் அதிகமான நிதி இழப்பை ஏற்படுத்தியதாக இலஞ்ச ஒழிப்பு ஆணையம் கூறுகிறது.

சேனாரத்ன தலைமறை வாகியுள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

# ஆட்சி கவிழும் என்று வங்குரோத்து அரசியல்வாதிகள் போலிப்பிரசாரம்!

## அமைச்சர் சந்திரசேகர் சாடல்



கொழும்பு, ஓக. 20

**"இந்த ஆட்சி கவிழும் என வங்குரோத்து அடைந்த அரசியல்வாதிகள் பிரசாரம் முன்னெடுத்து வருகின்றனர். இந்த போலி பரப்புரைக்கு வடக்கில் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகளும் உயிர்கொடுக்க முற்படுகின்றனர்." - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

இலங்கை ஐயப்ப சுவாமிமார்களின் யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தியதன் பின்னர் அது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன் தினம் கொழும்பு செட்டியார் தெரு கல்யாண முருகன் மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

ரவி குருசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் பிரதம அதிதியாகவும், இந்து சமய அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் வை.அனிருத்தன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஐயப்ப நாமத்தில் இயங்கும் அமைப்புக்கள், குரு சுவாமிகள் மற்றும் ஐயப்பன் தொடர்புடைய அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பெரும் எண்ணிக்கையிலானவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது சுவாமிமார்களால் பரிந்துரைக்கப்பட்ட ஐயப்ப மாலை அணிந்த சுவாமிமார்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் இருந்து வருகைதந்த ஐயப்பசாமி குருமார்கள் தங்களது கருத்துக்களையும் முன்வைத்தனர். அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதியமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர்களை குருசுவாமிகள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு,

" ஐயப்பன் யாத்திரை கடந்த காலங்களில் புனித யாத்திரையாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இதற்குரிய முயற்சி முன்னெடுக்கப்பட்டும் ஏன் அத்தனை வருடங்கள் நடக்கவில்லை? இனவாத ஆட்சியாளர்கள், இனவாத அமைச்சரவை இருந்ததால்தான் நடக்கவில்லை.

ஆனால் எமது சமதர்ம ஆட்சியில் இனவாதம் இல்லை. மக்கள் நலனுக்கே முக்கியத்துவம், முன்னுரிமை வழங்கப்படுகின்றது. அந்தவகையில் புனித யாத்திரை தொடர்பான அமைச்சரவை பத்திரம் வந்தபோது அதற்கு ஏகமனதாக ஆதரவளிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு முழுமையாக முன்னின்று செயற்பட்ட பிரதி அமைச்சர் தோழர் பிரதீப்புக்கு நன்றிகள்.

இளைஞர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி வருகின்றனர். சமூக சீர்கேட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே, சமூக மாற்றத்துக்கு ஆன்மீகவாதிகளின் பங்களிப்பும் மிக முக்கியம்.

அதேவேளை, வறுமை ஒழிப்புக்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மறுபுறத்தல் வரி வருமானம் அதிகரித்துள்ளது. பொருளாதார இலக்குகளை அடைந்து வருகின்றோம்.

இந்நிலையில் ஆட்சி மாற்றம் பற்றி வங்குரோத்து அரசியல்வாதிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இதற்கு உயிர்கொடுக்கும் வகையில் வடக்கில் தோல்விகண்ட, மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் முயற்சித்து வருகின்றனர்." - என்றார். (அ)

## வட்டுவாகல் பாலத்தை இரு வழி பாதையுடன் நிர்மாணிக்க திட்டம்!

கொழும்பு, ஓக. 20

பரந்தன் - கரைச்சி, முல்லைத்தீவு வீதியின் வட்டுவாகல் பாலத்தை மீண்டும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்க போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வட்டுவாகல் பாலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் களப்புக்குக் குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 2009 ஆம் ஆண்டில் இறுதியாக திருத்தப்பட்டுள்ள குறித்த பாலம் தற்போது பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்ற நிலையில் கடந்த காலத்தில் மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம், இதனை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால், இருவழிப் பாதையுடன் கூடிய புதிய பாலமாக அதனை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்காக, தேசிய போட்டி விலைமனுக் கோரல் முறைமையின் அடிப்படையில் விலைமனுக்கள் கோரபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இளைஞர், யுவதிகளுக்கு புதிய வீட்டு வசதி திட்டம்!

கொழும்பு, ஓக. 20

சிறுவர் பாதுகாப்பு மையங்களில் வசிக்கும் இளைஞர், யுவதிகள் திருமண வயதை எட்டும்போது, அவர்களுக்கு பாதுகாப்பான வசிப்பிடத்தை வழங்கும் வகையில் புதிய வீட்டு வசதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், அபிவிருத்தி நிதித் திணைக்களம், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களை ஒருங்கிணைத்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பாக சிறுவர் அபிவிருத்தி நிலையங்களில் பாதுகாப்பில் இருந்து சமூகத்திற்கு மீளும், திருமண எதிர்பார்ப்புடன் உள்ள அல்லது கடந்த 10 வருடத்தில் திருமணமான பாதுகாப்பான வீடு இல்லாதவர்கள் 18 வயது பூர்த்தியடைந்த இளைஞர், யுவதிகளுக்கு வீட்டு வசதியை வழங்குவதே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத் திட்டத்தின் கீழ், ஒரு வீடு அமைப்பதற்காக 1 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 2025 வரவு-செலவு திட்டத் தில் 1000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விவசாயிகளுக்கான உர மானியம் டிஜிற்றல் முறையில் நடைமுறைக்கு

கொழும்பு, ஓக. 20

விவசாயிகளுக்கான உரமானியத்தை வழங்கும் போது அந்தந்த விவசாயிகளுக்கு குறித்த மானியத்தை சரியான நேரத்தில் கிடைக்கின்றமையையும், குறித்த நிதியுதவியை தமது விவசாய நடவடிக்கைகளுக்கான உரத்தேவைக்காக முழுமையாகப் பயன்படுத்துகின்றமையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், குறித்த பின்னூட்டல் செயற்பாட்டுக்கு வசதியளித்து விவசாயிகளுக்கு உர விநியோகத்தை மிகவும் முறைசார்ந்த வகையிலும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்காக கியூ.ஆர். குறியீடு அல்லது பொருத்தமானமுறையொன்றைப் பயன்படுத்த வேண்டியமை கண்டறியப்பட் டுள்ளது.அதற்கமைய, உரமானிய வேலைத்திட்டத்திற்கு தகைமை பெறுகின்ற அனைத்து விவசாயி களும் விவசாய விடயதான அமைச் சின் கீழ் பிரதேச செயலாளர்கள் மூலம் அடையாளங் காண்பதற்கும், அவ்வாறு தகைமைபெறுகின்ற விவசாயிகளுக்கு உரமானியத்தை வழங்குவதற்கும் கியூ.ஆர். முறைமை அல்லது பொருத்தமான டிஜிற்றல் பொறிமுறையை உருவாக்குவ தற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் மற்றும் டிஜிற்றல் பொருளாதார அமைச்சரான ஜனாதிபதி, கமத்தொ ழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org